7 -DEC 19

உ

முருகனே துணை.

சிவகாசி மாநகர் அலங்காரம்.

இஃது

சிவகாசி,

மகா-ா-ா-ஸ்ரீ செ. கருப்பணநாடாரவர்கள் குமாரரும்,

சந்திவிநாயகர் கோயில் தமிழ்ப் பாடசாலை

உபாத்தியாயருமாகிய சோதிடம்,

குருசாமி நாடாரவர்களால் இயற்றப்பெற்று,

ஷை யூர் ஸ்ரீமான்

தூ. ச. சின்னக்கனி நாடாரவர்களால்,

பார்வையிடப் பெற்றது.

க்ஷத்திரிய குலத்தவர்கள் பொருளுதவியால்

சிவகாசி,

நாடார் பிரஸ் லிமிட்டெட் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

மூன்றாம் பதிப்பு.

1923.

Q2:38.2x4551
N23
18085

உ

முருகனே துணை.

சாற்றுக்கவிகள்.

சிவகாசி வெற்றி விநாயகர் கோயிற் பாடசாலை உபாத்தியாயரும் ஷை யூர் ஸ்ரீமான் தூ. ச. சின்னக்கனி நாடாரவர்களின் முதல்மாணுக்கருமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ

18085

மா. கு. வ. சுப்பையா நாடாரவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

திருப்பு நிதர்வாழுஞ் சிவகாசிச் சீரை
விருப்புநித மாகவுமே விண்டான்—கருப்புநிகர்
சொல்லா னெழில்மருவுந் தூய குருசாமி
நல்லா தரம்பெருக நன்கு.

சிவகாசி, இந்து எலிமெண்டெரி ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் ஸ்ரீமான் தூ. ச. சின்னக்கனி நாடாரவர்கள் மாணுக்கரிலொருவருமாகிய

மகா-௱-௱-ஸ்ரீ

K. சர்க்கரைப் புலவரவர்கள் இயற்றியது.

நேரிசை வெண்பா.

போதி லனமுறங்கும் பொற் சிவகாசிச் சிறப்பை
யோதி மகிழ்வடைந்தா ஞேகரத்தின்—மீது
வருசாமி செய்ய மலரடியைப் போற்றுங்
குருசாமி யென்னுமிக் கோன்.

உ

முருகனே துணை.

சிவகாசி மாநகர்

அலங்காரம்.

விநாயகர் துதி.

திருமருவுஞ் சிவகாசி நகர்வளத்தை யான்மகிழ்ந்து
செப்பத் தூய
தருமருவும் பூமானு மயனையுந்தி பூத்தவருள்த்
தாதை தானும்
பெருமகிழ்வோ டெஞ்ஞான்று மறுச்சனைசெய் சிவவேழம்
பெடபி னீன்ற
ஒருமருப்புக் குழக்கன்றி னுபயபதாம் புயமலரை
யுச்சிவைப்பாம்.

அம்பிகை துதி.

சித்திர மெழுது மாடச் சிவகாசி நகரில் வாழுஞ்
சத்திரங் கரத்தி லேந்துஞ் சண்முகன் றன்னை யீன்ற
வத்திர நேர்கண் ணளை யஞ்சனக் கிரிய னளைப்
பத்திர காளித் தாயைப் பணிவுடன் வணக்கஞ் செய்வாம்:

அவையடக்கம்.

சோனைமாரியிற் கவிபொழி புலவர்முன் றுணிவாய்
நானவாவினல் மகிழ்ந்திந்த நூலினை நவிலல்
வானுலாங்க லுழற் கெதிரொரு சிறுமசகந்
தானுலாவி மீப்பறப்பதற் கெண்ணுதல் தகையும்:

சீர்வளருஞ் சிவகாசி நகர் வளத்தைக்
குருசாமித் திறலோன்றன்பா
லேர் வளருஞ் செழுந்தமிழைக் கற்றிடுமா
ணக்கரினல் லியல்பு வாய்ந்த
தார் வளரும் வாகுடைய சண்முகமென்
றொருசு சுமுகன்றன்னோ டின்பப்
பேர்வளரு நூல்பயிலும் பிள்ளைகளோ
டகமகிழ்ந்து பேசுவானே.

நூல்

தொண்டிச் சிந்து.

பாருங்கள் நேசர்களே—நமை ரட்சிக்கும்
  பால விலோசனன் றிரு வாலயத்திலே
சீருற்றிலங்குஞ்சுவர்னத்—தகடிழைத்துச்
  செய்திருக்கு மண்டபத்தின் றுய்யசோதியும் (1)

உம்பருகலத்தை யெட்டியே—கடந்து விண்ணி
  லோங்கிய கொடிமரத்தின் பாங்கிலுற்றிடும்
கும்ப கலசங்களுடனே—வகுத்திருக்குங்
  கோபுரங்களும் பெருகு சோபனத்துடன் (2)

செம்பதுமம் பூத்திருக்குஞ்—சலநிறைந்த
  தெப்பமதிலேயமரர் பொற்புடன் மூழ்கி
தும்பைமதி கொன்றையணியும்—பரஞ்சுடரைத்
  தோத்திரஞ்செய் தின்பமுடன் காத்திருந்திடும் (3)

இப்பெருமை கண்டுமகிழ்ந்தோ—மிதுபயிர்ச்சிக்
  கேற்றதிரு ஞானசபை நேர்த்தியாகவே
செப்பரிய யாளிநிறுத்தி—வகுத்திடுநற்
  சிங்கார மண்டபமுந் தங்கரதமும். (4)

கஞ்சமலர் மாதுடன்வாழும்—எழில்மிகுந்த
  கண்ணபிரா ஞலயமும் மண்ணுள்ளோர்களை
யஞ்சலென வாதரித்திடுங்—கருப்பசாமிக்
  காவலுடன் கட்டிவைக்குங் கோவிலழகும் (5)

வையம் புகழும் அரசன்—குலத்திலுள்ளோர்
  வைத்த தண்ணீர்ப் பந்தலிது சித்திரத்துடன்
செய்யதிரு வம்மன்கோயிலும்—மலைப்பழமுந்
  தேங்கனி ரசமிகுந்த மாங்கனிகளும் [6}

அரிசிக் கடை களுடனே—யெண்ணைக்கடையும்
  அக்கினி விநாயகன்றன் மிக்க கோயிலும்

விரியும் பலசரக்குகள்—வைத்துநிதம்
  விற்பனைசெய் கடைகளும் பொற்புடன்மேவுந் (7

தேங்காய்க் கடைமகிமையும்—அய்யணபூமான்
  செய்ய தவத்தாலுதித்துத் துய்யபுகழே
தாங்கிய செல்வமுடையோன்—ஆறுமுகச்
  சாமி மகிபன்மளிகை பூமின் வசிக்கப் (8

பார்த்தோமிரும்புக்கடையும்—மரக்கடையின்
  பத்தியுந் தோற்கடைகளுஞ் சித்தமகிழ்ந்து
சீர்த்தி பெருகுஞ்சவளிக்—கடைகளிது
  செப்பினேன் கலைக்கடை யொப்பமுடனே (9)

சின்ன முதலாளியவர்கள்—மகிழ்ந்துபெற்ற
  சேமத் துரைச்சாமிராம சாமியிவர்கள்
உன்னதமாக வமைத்த—கனகமணி
  யுப்பரிக்கை மகிமையைச் செப்பமுடியா (10)

18085

இன்னமும் பார்த்திடுவீர்—தருவில் வள
  ரிந்திரன் கொலுவிருக்கப் புந்தியிற்செய்யும்
சொன்னமய மாளிகையும்—இதற்கு நிகர்
  சொல்ல முடியாதுதிருச் செல்விவாழ்ந்திடுந் (11)

தெற்குரத வீதியிதுதான்—அக்கசாலையுஞ்
  செப்பரிய சுப்பையவேளுட் பரிகையும்
பொற்புமிகு சண்முகதீரன்—வசித்திருக்கும்
  பொன்னுலவு மாடமிது நன்னிதிமிகும் (12)

போகிநிகர் கந்தசாமிவேள்—தவபலத்தாற்
  புத்ரனென வந்தசிவ பத்தியுடையோன்
வாகுமிகு கன்னியப்பமால்—பொருந்திவளர்
  மாற்றரிய மேதகத்தால் தீற்றிவகுத்த (13)

மாடமிது இச்சிவகாசி—நகரிலுள்ள
  மன்னவராஞ் சத்திரியர் நன்னயத்துடன்

ஆடகத்தினு லமைத்த—விக்டோர்யா
அன்பர் வித்யாசாலையிது பொன்மிகுத்திடும் (14)

காளியப்ப பூபதியின்—மாளிகையைக்
காட்டினே னந்தணர் வீதி தாட்டிகத்துடன்
கேளுங்கள் தந்திஆபீசும்—நமது குரு
கீர்த்தியுடன் வாழ்மனையைப் பார்த்துமகிழ்ந்தோம் (15)

கங்கையணி வேணியுடையான்—தனது திருக்
காதினிற் பிரணவத்தை யோதிய குகன்
மங்கைவள்ளி தெய்வானை —யுடன் மயிலில்
வாழ்ந்திருக்குங் கோயிலிது வீழ்ந்து கும்பிட்டோர் (16)

பவமென்னும் பிணிகளெல்லாம்—பருதி கண்ட
பனியெனப் போயொழிக்கும் புனிதமுடன்
நவமிகுத்திடும் பெரிய—சாமிவள்ளல்
நற்காளி யப்பதுரை சிற்பமளிகை (17)

காணுங்க ளெவ்விடத்திலும் —பஞ்சுவர்த்தகங்கள்
கண்டோர் வியப்புறவே கொண்டுவிற்றிடும்
பூணுநிதியு மலிந்த —மகாலிங்க
பூமனெழிற் சோணை முத்துக்காமன் மந்திரம் (18)

இஞ்சிகள் மஞ்சினைத் தீண்டும்—வளமுடைய
எற்ற சத்ரியர் பேட்டையிது தோற்றுமதுதான்
நெஞ்சினில் வஞ்சக மில்லாத்—தேவமார்கள்
நேயமுடன் வாழ்ந்திருக்குந் தூயதெருவே. (19)

இலைவணிகர் வீதி யிதுதான்—மகம்மதியர்க்
கேற்றதெரு பார்த்திடுவீர் பூர்த்தி யாகவே
பலமனிதர் மூழ்கப் பெருகும்—நாயக்கர் தெப்பம்
பார்த்தோ மதிகநய கீர்த்தி மேவிடும் (20)

பத்ரகாளி யம்மன் கோயிலும்—நந்தவனமும்
பாங்கினிற் றெப்பக்குளமும் சோங்குடன் கண்டோம்
பத்திபத்தி யான சோலையும்—இதன்கிழக்குப்
பக்கமுப்பி டாரிவாழுந் தக்க கோயிலும் (21)

மாலை நந்த வனங்களுடனே—குலாலர்வீதி
மாசிறப் புடனரனைப் பூசிதை யெந்தக்
காலையுஞ்செய் யோகியர் வீதி—இதனகிழக்குக்
காணுதம்மன் கோயிற்பட்டி சேணிற் றுலங்கும் (22)

மாரியம்மன் கோயில் தெப்பமுஞ்—சுப்பையபூமான்
மாட்சிமைசேர் கல்விச்சாலைக் காட்சியுங் கண்டோம்
சீர்மதுரை யாறுமுகவேள் —கட்டிய பாலச்
சிங்காரம் போலுலக மெங்கினு மில்லை. (23)

வடதிசைக் கோனிகர்த்த—தங்கையா வாழும்
மாளிகையின் பெருமையுங் காளி கோயிலின்
திடமுடனே தரும—கருத்தா வேலைச்
செல்லையாவின் மாடமிது சொல்ல முடியா. (24)

வண்டமிழுஞ் செல்வர் நிதியும்—மிகப்பெருகு
வாசவன்மெய் யன்பர்களின் நேசமுடையோன்
கொண்டலை நிகர்த்த கொடையான்—வீரப்பதிரக்
கோமான்பொன் மாடமிது சேமமுடனே (25)

மாத்தினங் குடியிருக்கும்—ரத்தினசாமி
மாடமிது முந்நாளி லோடை மதமாக்
காத்தபரன் றன்னைத் துதிக்கும்—ராமவுதாரன்
காளிமகிபதி யிவர் மாளிகை பாரும் [26]

குதுகுலத் துடன்மகிழ்ந்தே—யரிசி விற்குங்
கொட்டகையை நோக்கிடுவீர்—திட்டமுடனே
யிதுசவளி வர்த்தகர்கள்—கட்டு மண்டபம்
எண்ணரிய மால்க்கடையும்வண்ண முடைய [27]

நாச்சியப்ப பூபதியின் —கடையழகும்
நன்றாகப் பார்த்திடுவீர் குன்று மலை
காச்சியுடனாறுமுகவேள்—மளிகை தன்னைக்
கண்டு விரைவினில் மகிழ்கொண்டு வாருங்கள் [28]

நெல்லுக் கடைகளுடனே—புஷ்பக்கடையும்
நீங்காத சாப்புக்கடைப் பாங்கி லுற்றிடுஞ்
சொல்லரிய வெற்றிலைக்கடை—பொடிக் கடையுஞ்
சொன்னேன் பெருநிதிகள் மன்னி வாழ்ந்திடும் [29]

சத்திரியர் மாளிகை பாரும்—எங்கு பார்த்தாலும்
  தங்கக் கலசங்களாகப் பொங்குகின்றது
சித்திரஞ்சேர் வெள்ளி வாகனம்—வைத்திருக்குஞ் [30]
  சீரான கடையிது நேராகவே.

வெள்ளையப்ப தீர குணவான்—கம்பேனியிது
  மிக்கநிதி நெல்லையப்ப தக்கபுகழான்
எள்ளவில்லாக் கடைமகிமை—யுரைப்ப தென்று [31]
  லெந்நாளு முடியாது பன்னுவினுல்

சந்தி விநாயகனுர்—வீற்றிருக்குஞ்
  சன்னிதி யிதுமகிழ்ந்து யின்னமும் பாரும்
வந்துவிட்டோம் புகழ்சேர்—நமது குரு [32]
  வள்ளல்குரு சாமிதிருப் பள்ளிக்கூடமே.

செய்ய சிவகாசி வாழ்க—நமதரசன்
  செங்கோலும் வாழ்கநிதம் மங்காமலே
அய்யன்விசு வேசர் வாழ்க—மலைமகளாம் [33]
  ஆண்டவள் சாலாட்சிமிக நீண்டு வாழ்ந்திட

சத்திவடி வேற்குகன் வாழ்க—அருள் மிகுந்த
  தாயாம்வள்ளி தெய்வயானை நேயமா வாழ்க
அத்திமுகத் தோன்வாழ்க—நமக் கருள் செய் [34]
  ஆத்தாள் பத்திரகாளி சீர்த்தியாய் வாழ்க

என்னைக் கருணைபுரிந்து—பள்ளிக்கூடந்தந்
  தெந்நாளு மாதரிக்குங் கன்னபூபதி
சொன்னமொழி தவறாத—சண்முகதீரன் [35]
  சுத்தசன பந்துமக்கள் நித்தமும் வாழ்க

சத்திரிய ருடனுலகில்—இனிதிருக்குஞ்
  சகலரும் வாழ்ந்திருக்க மிகச்செழித்தே
இத்தமிழ்சேர் நாளும் வாழ்க—கல்விச் சாலையும் [36]
  எந்நாளு பேபெருமை மன்னி வாழ்கவே.

சிவகாசி மாநகர் அலங்காரம்

[illegible]றுப் பெற்றது.